# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2126/31 - 2019 ජූනි මස 04 වැනි අඟහරුවාදා - 2019.06.04

*2126/31 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு யூன் மாதம் 04 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டம்**

92 ஆம் பிரிவின் கீழான கட்டளை

1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைக் கட்டளைச் சட்டத்தின், 92 ஆம் பிரிவின் பிரகாரம் எனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி நகரத் திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சர் ரவூப் ஹக்கீம் ஆகிய நான், தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் நுவரெலிய மாவட்ட கூட்டு நீர் வழங்கல் திட்டத்தின், வலப்பனை நில்தன்டாஹின்ன நீர் வழங்கல் முறையின் (திட்டத்தின்), அமுக்க கட்டுப்பாட்டுத் தாங்கி இலக்கம் 1 ஐ நிர்மாணிப்பதற்கு காணித்துண்டொன்று தேவைப்படுவதனால், இங்கு கீழ் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணித்துண்டின் அசையாச் சொத்தின் உரிமையைப் பெற்றுக்கொள்வதற்கான கட்டளையை அனுமதிக்கின்றேன்.

ரவூப் ஹக்கீம்,
நகரத் திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சர்.

நகரத் திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சு,
இலக்கம் 35, புதிய பாராளுமன்ற வீதி,
பெலவத்தை,
பத்தரமுல்லை,
2019, மே 28.
5/2/1/1461.



இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

**அட்டவணை**

*மத்திய மாகாணத்தின் நுவரெலியா மாவட்டத்தில், வலப்பனை பிரதேச செயலாளர் பிரிவில் இலக்கம் 515பீ, வலப்பனை கிராம அலுவலர் பிரிவில் வலப்பனை (கல்பிஹில்ல வளைவு) கிராமத்தில் அமைந்துள்ள "பொது சுகாதார பரிசோதகர் அலுவலகத்திற்கு அருகிலான காணி (கல்பிஹில்ல அருகில் அமைந்த காணி)" என்னும் காணியின் கீழ் காணப்படும் எல்லைகளில் அமைந்த சுமார் 10.5 பேர்ச்சஸ் அளவிலான காணித்துண்டு-*

*காணியின் பெயர் : பொது சுகாதார பரிசோதகர் அலுவலகத்திற்கு அருகிலான காணி (கல்பிஹில்ல அருகில் அமைந்த காணி)*

*விஸ்தீரணம் : 10.5 பேர்ச்சஸ்*

***காணியின் எல்லைகள் :***

*வடக்கு : பொது சுகாதார பரிசோதகர் விடுதி அமைந்த பிரதி சுகாதார சேவைப் பணிப்பாளர் அலுவலகத்திற்கு உரிய காணியின் எஞ்சிய பகுதி ;*

*கிழக்கு : பொது சுகாதார பரிசோதகர் விடுதி அமைந்த பிரதி சுகாதார சேவைப் பணிப்பாளர் அலுவலகத்திற்கு உரிய காணியின் எஞ்சிய பகுதி ;*

*தெற்கு : கண்டி, வலப்பனை, ராகல பாதை (வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு உரிய) ;*

*மேற்கு : காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவுக்கு (LRC) உரிய காணி.*

*காணிக்கு உரிமை கோருகின்றவரின் பெயரும் முகவரியும் :*

*1. தலைவர் (காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு),
இலக்கம் : 475, கடுவெல வீதி,
கனேஹேன,
பத்தரமுல்லை.*

*06-553*

---

***1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டம்***

*92 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டத்தின், 92 ஆம் பிரிவின் கீழ் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் நகரத் திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சர் ரவூப் ஹக்கீம் ஆகிய நான், குறித்த சபைக்கு அரணாயக பிரதேச செயலகப் பிரிவில் மண் சரிவினால் பாதிக்கப்பட்டுள்ளவர்களுக்கு குடிநீர் வழங்கும் செயற்திட்டத்தின் கீழ் நீர் உட்கொள் கிணறு, நீர் இறைக்கும் இயந்திரசாலை மற்றும் அது வரையில் செல்கின்ற உட்செல்லும் பாதை ஆகியவற்றை நிர்மாணிப்பதற்காக காணிப்பகுதி ஒன்றினைச் சுவீகரித்துக் கொள்வதற்கான தேவை ஏற்பட்டுள்ளமையினால், இங்கு கீழ் காணப்படும் அட்டவணையில் குறித்துக்காட்டப்பட்டுள்ள காணிப்பகுதியின் அசையாச் சொத்துரிமையை சுவீகரித்துக்கொள்வதை இக்கட்டளையினூடாக அனுமதிக்கின்றேன்.*

*ரவூப் ஹக்கீம்,
நகரத் திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சர்.*

*நகரத் திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சு,
இலக்கம் 35, புதிய பாராளுமன்ற வீதி,
பெலவத்தை,
பத்தரமுல்லை,
2019, மே 28.
5/2/2/1465.*

**அட்டவணை**

*கேகாலை மாவட்டத்தின், அரணாயக பிரதேச செயலகப் பிரிவில் இலக்கம் 44A, ஹபலக்காவ கிராம அலுவலர் பிரிவில் ஹபலக்காவ கிராமத்தில் அமைந்துள்ள மஹ ஓய ரக்ஷிதய மற்றும் நய்கொடாதெனியம என்றழைக்கப்படுகின்ற உத்தரவுபெற்ற நில அளவையாளர் திரு. எல். சீ. கே. லியனகே அவர்களினால் தயாரிக்கப்பட்டுள்ள WB/2017/18 திட்டப்படத்தின் துண்டு இலக்கம் 1 மற்றும் WB/2017/18A திட்டப்படத்தின் துண்டு இலக்கம் 01 எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ள காணியின் முழு விஸ்தீரணத்திலிருந்து அண்ணளவாக 3.2 பேர்ச்சஸ் விஸ்தீரணத்தையுடைய பின்வரும் எல்லைகளுக்குள் அமைந்துள்ள காணிப்பகுதி-*

*01.* **WB/2017/18 திட்டப்படத்தின் துண்டு இலக்கம் 01**

வடக்கு : குறித்த காணியின் மீதமாயுள்ள பகுதி ;
கிழக்கு : குறித்த காணியின் மீதமாயுள்ள பகுதி ;
தெற்கு : குறித்த காணியின் மீதமாயுள்ள பகுதி ;
மேற்கு : குறித்த காணியின் மீதமாயுள்ள பகுதி.

*02.* **WB/2017/18A திட்டப்படத்தின் துண்டு இலக்கம் 01**

வடக்கு : WB/2017/18 திட்டப்படத்தின் துண்டு இலக்கம் 01
கிழக்கு : குறித்த காணியின் மீதமாயுள்ள பகுதி ;
தெற்கு : பிரதேச சபை வீதி ;
மேற்கு : குறித்த காணியின் மீதமாயுள்ள பகுதி.

*காணிக்கு உரிமை கோருகின்றவரின் பெயரும் முகவரியும் :*

1. திரு. டி. சமரதுங்க,
துபரவ,
தல்கஸ்பிடிய, அரணாயக.

*06-554*

---

***1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டம்***

92 ஆம் பிரிவின் கீழான கட்டளை

*1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டத்தின், 92 ஆம் பிரிவின் கீழ் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் நகரத் திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சர் ரவூப் ஹக்கீம் ஆகிய நான், நீர்கொழும்பு கழிவு நீர் மீள் சுழற்சி செயற்திட்டத்தின் கீழ் 17 ஆம் இலக்க கழிவு நீர் இறைக்கும் இயந்திரசாலையை நிர்மாணிப்பதற்காக காணிப்பகுதி ஒன்றினை சுவீகரித்துக் கொள்வதற்கான தேவை ஏற்பட்டுள்ளமையினால், இங்கு கீழ் காணப்படும் அட்டவணையில் குறித்துக்காட்டப்பட்டுள்ள காணிப்பகுதியின் அசையாச் சொத்துரிமையை சுவீகரித்துக்கொள்ளும் கட்டளையினூடாக அனுமதியளிக்கின்றேன்.*

ரவூப் ஹக்கீம்,
நகரத் திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சர்.

நகரத் திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சு,
இலக்கம் 35, புதிய பாராளுமன்ற வீதி,
பெலவத்தை,
பத்தரமுல்லை,
2019, மே 28.
5/2/3/1466.

**அட்டவணை**

கம்பஹா மாவட்டத்தின், நீர்கொழும்பு பிரதேச செயலகப் பிரிவில் இலக்கம் 159, பெரியமுல்ல கிராம அலுவலர் பிரிவில் பெரியமுல்ல கிராமத்தில் அமைந்துள்ள அண்ணளவாக 12 பேர்ச்சஸ் விஸ்தீரணத்தையுடைய பின்வரும் எல்லைகளுக்குள் அமைந்துள்ள காணிப்பகுதி–

வடக்கு : பழைய சிலாபம் வீதி மற்றும் கத்தோலிக்க உருவச்சிலை ;
கிழக்கு : புகையிரத வீதி ;
தெற்கு : புகையிரத வீதி வாய்க்கால் வழி மற்றும் அருகாமையிலுள்ள காணி ;
மேற்கு : வாய்க்கால் வழி.

*காணிக்கு உரிமை கோருபவரின் பெயரும் முகவரியும் :*

1. திரு. என்ட்ரு சுஹசிங்க,
இல. 3, பன்சலை வீதி, பாமன்கட சந்தி,
நீர்கொழும்பு.

*06-555*

---

## *1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டம்*

*92 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டத்தின், 92 ஆம் பிரிவின் கீழ் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் நகரத் திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சர் ரவூப் ஹக்கீம் ஆகிய நான், நீர்கொழும்பு கழிவு நீர் அகற்றல் செயற்திட்டத்தின் கீழ் 'சீ ' ஆம் இலக்க கழிவு நீர் இறைக்கும் இயந்திரசாலையை நிர்மாணிப்பதற்காக காணிப்பகுதி ஒன்றினை சுவீகரித்துக்கொள்வதற்கான தேவை ஏற்பட்டுள்ளமையினால், இங்கு கீழ் காணப்படும் அட்டவணையில் குறித்துக்காட்டப்பட்டுள்ள காணிப்பகுதியின் அசையாச் சொத்துரிமையை சுவீகரித்துக் கொள்ளும் கட்டளையினூடாக அனுமதியளிக்கின்றேன்.*

ரவூப் ஹக்கீம்,
நகரத் திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சர்.

நகரத் திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சு,
இலக்கம் 35, புதிய பாராளுமன்ற வீதி,
பெலவத்தை,
பத்தரமுல்லை,
2019, மே 28.
5/2/3/1467.

**அட்டவணை**

கம்பஹா மாவட்டத்தின், நீர்கொழும்பு பிரதேச செயலகப் பிரிவில் இலக்கம் 77ஏ, கம்மல்துர கிராம அலுவலர் பிரிவில் போருதொட்ட கிராமத்தில் அமைந்துள்ள அண்ணளவாக 40 பேர்ச்சஸ் விஸ்தீரணத்தையுடைய பின்வரும் எல்லைகளுக்குள் அமைந்துள்ள காணிப்பகுதி–

வடக்கு : போருதொட்ட பேக்கரி வீதி ;
கிழக்கு : உரிமையாளர் தெரியாத தனியார் காணிப்பகுதி ;
தெற்கு : உரிமையாளர் தெரியாத தனியார் காணிப்பகுதி ;
மேற்கு : போருதொட்ட வீதி.

*காணிக்கு உரிமை கோருகின்றவரின் பெயரும் முகவரியும் :*

கண்டறிய முடியவில்லை.

*06-556*

---

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.